# NEW ACCOUNTING MODEL

G.C.E (Advanced Level)

# உயர் கணக்கீடு

## நிறைவில் பதிவு
## Incomplete Entry

Study Kit



Tutor:


MR.BALAKAJEN

{B.Com (Jaf), H.N.Dip-in-Acc,
Dip-in-Edu (OUSL), M.Com (Hons)}



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவில் பதிவு Incomplete entry

01) நிறைவில் பதிவு (Incomplete Entry) என்றால் என்ன?
இரட்டைப் பதிவு முறையை முற்றிலும் பின்பற்றாமல் கணக்குகளைப் பேணும் எவ்வகையான பதிவுகளும் நிறைவில் பதிவுகள் எனப்படும்.

02) ஒற்றைப் பதிவு (Single Entry) என்றால் என்ன?
கொடுக்கல் வாங்கல் ஒன்றின் ஒரு பதிவு மாத்திரம் நிறுவன ஏடுகளில் பதிந்து கொள்வது ஒற்றைப் பதிவு எனப்படும். இவ் ஒற்றைப் பதிவு முறையும் நிறைவில் பதிவாகும். பொதுவாக இம்முறையில் காசுக் கொடுக்கல் வாங்கல்களில் காசுக்கணக்கில் மட்டும் பதியப்படும். மற்றைய பதிவு மேற்கொள்ளப்படுவதில்லை.

eg : விற்பனை ரூபா 100000, காசுக் கணக்கில் வரவில் பதிதல் ஆனால் அதன் எதிர்ப் பதிவு விற்பனைக் கணக்கில் பதியாமல் விடல்.

03) இரட்டைப் பதிவு, ஒற்றைப் பதிவு ஆகியவற்றினை வேறுபடுத்துக?

| இரட்டைப் பதிவு | ஒற்றைப் பதிவு |
|---|---|
| 1. நிறைவுப் பதிவாகக் காணப்படும் | 1.நிறைவிற் பதிவாகக் காணப்படும் |
| 2. முறையான ஏட்டுத் தொகுதிகள் பேணப்படும் | 2.முறையான ஏடுகள் பேணப்பட மாட்டாது |
| 3. பொதுவான நியமங்களுக்கேற்ப பதிவு மேற்கொள்ளப்படும் | 3.எவ்விதமான நியமங்களுமின்றி பதிவு மேற்கொள்ளப்படும் |
| 4. கடந்த காலத் தகவல்கள் ஒழுங்காகக் காணப்படும் | 4.ஞாபகக் குறிப்பேடுகளாக அமைந்திருக்கும் |
| 5. தரவுகள் செம்மையாக இருக்கும் | 5.செம்மைத் தன்மை காணப்பட மாட்டாது |
| 6. பரீட்சை மீதியினை தயார் செய்யலாம் | 6.பரீட்சை மீதியினை தயார் செய்ய முடியாது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04) ஒற்றைப் பதிவு முறையில் கணக்குகளினை பேணுவதற்கான காரணங்கள் யாவை?

1. இரட்டைப் பதிவு தொடர்பான அறிவின்மை
2. இரட்டைப் பதிவு தொடர்பான அக்கறை இன்மை
3. கணக்குப் பதிவு தொடர்பான செலவுகளை குறைக்க முற்படல்

05) ஒற்றைப் பதிவு முறையில் கணக்குகளினைப் பேணுவதால் ஏற்படும் அனுகூலங்கள் யாவை?

1. கணக்கு வைத்தல் செலவுகள் மிகவும் குறைவானதாகும்.
2. விரைவாக பதிவுகளை மேற்கொள்ளலாம்.
3. பிரத்தியேக ஆளணிகள் தேவையில்லை.
4. சிறிய நிறுவனங்களுக்கு பொருத்தமானது.
5. உரிமையாளரே கணக்கை பேணுவதனால் இரகசியம் பேணப்படும்.
6. இலாப நட்டக் கணிப்பு சுலபமானதாக இருக்கும்.

06) ஒற்றைப் பதிவு முறையில் கணக்குகளினைப் பேணுவதால் ஏற்படும் பிரதிகூலங்கள் யாவை?

1. நிறுவனத்தின் சரியான பெறுபேறுகளினை அறிய முடியாது
2. அவ்வாறு அறியப்பட்ட பெறுபேறுகளினை உறுதிப்படுத்த முடியாது
3. செலவுகளினைக் கட்டுப்படுத்த முடியாது
4. நிறுவனத்திற்குள்ளேயே ஊழல்கள், மோசடிகள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாகக் காணப்படும்.

07) நிறைவில் பதிவுகள் மூலம் செயற்பாட்டு இலாபம் அல்லது நட்டத்தைக் கணிக்கும் முறைகள் யாவை?

1. தேறிய சொத்துக்களின் அடிப்படை ⟹
   வருமானக் கூற்றினைத் தயாரிப்பதற்குத் தேவையான போதியளவு தகவல்கள் பெற்றுக் கொள்ள முடியாத போது குறித்த நிதியாண்டு காலத்தின் ஆரம்ப, இறுதி தேறிய சொத்துக்களை (மூலதனங்கள்) பயன்படுத்திக் குறித்த நிறுவனத்தின் இலாப/நட்டம் கணித்துக் கொள்ளப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

2. இரட்டைப் பதிவுக்கு மாற்றும் அடிப்படை ⟹
குறித்த நிறுவனத்தின் தற்போதைய தகவல்கள் மூலம் வருமானக் கூற்றினைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியுமாயின் வருமானக் கூற்றினைத் தயாரித்து குறித்த நிறுவனத்தின் இலாப நட்டம் கணித்துக் கொள்ளப்படும். அத்துடன் அத்திகதியில் உள்ளபடியான ஐந்தொகையும் தயாரிக்க முடியும்.

08) தேறிய சொத்துக்களைப் பயன்படுத்தித் தேறிய இலாபத்தைக் கணிப்பதற்கான படிமுறையினை விளக்குக.

1. நிறுவனத்தின் சொத்துக்கள், பொறுப்புக்கள் பற்றிய தகவல்களைத் திரட்டக் கூடிய சந்தர்ப்பங்களில் அச்சொத்துக்களுக்கும் பொறுப்புக்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைக் கணிப்பதன் மூலம் தேறிய சொத்துக்களைக் கண்டு கொள்ள முடியும். ஆரம்ப, இறுதி தேறிய சொத்துக்களுக்கிடையேயான வேறுபாடு குறித்த நிறுவனத்தின் காலத்திற்கான இலாபம் அல்லது நட்டமாகும் (மேலதிக மூலதனமிடல், பற்றுதல் இல்லாத நிலையில்)

*தேறிய லாபம் = இறுதி மூலதனம் - ஆரம்ப மூலதனம்*

2. நிதியாண்டுக் காலத்துள் மேலதிக மூலதனமிடல், மூலதனத்தை மீளெடுத்தல் (பற்றுதல்) போன்ற தகவல்கள் எவையேனும் இருக்குமானால் அவைகள் மேலேயுள்ள இலாபத்தில் அல்லது நட்டத்தில் செம்மையாக்கல் செய்வதன் மூலம் தேறிய இலாபம் அல்லது தேறிய நட்டத்தைக் கணித்துக் கொள்ள முடியும்.

*தேறிய லாபம் = இறுதி மூலதனம் + பற்று − (ஆரம்ப மூலதனம் + மேலதிக மூலதனம்)*

*அல்லது*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேறிய இலாபம் = இறுதிதேறிய சொத்து + பற்று + (ஆரம்ப தேறிய சொத்து + மேலதிக மூலதனம்)

தேறிய சொத்து = மூலதனம் (உரிமை)

தேறிய சொத்து அதிகரிப்பு/ குறைவு = மூலதனம் அதிகரிப்பு/ குறைவு

## Problems

01. தனிவியாபாரமொன்றின் கீழே தரப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் 2012.03.31இல் முடிவடைந்த வருடத்திற்கான உழைக்கப்பட்ட இலாபம் என்ன?
   * 01.04.2011 இல் உள்ளபடியான உரிமையாண்மை ரூபா 500000
   * 31.3.2012இல் மொத்தச் சொத்துக்களும், மொத்தப் பொறுப்புக்கும் முறையே ரூபா 800000, ரூபா 200000 ஆகும்.
   * இக்கணக்காண்டு காலத்தினுள் மேற்கொண்ட பற்றுக்கள் ரூபா 30000

02. பின்வரும் தகவல்கள் அமிலா வியாபாரத்துடன் தொடர்புடையதாகும்.

| | 31.12.2012 | 01.01.2012 |
|---|---|---|
| மொத்தச் சொத்துக்கள் | 750000 | 500000 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 350000 | 200000 |

இவ்வருட காலத்தில் உரிமையாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட பற்றுக்கள் ரூபா 40000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31.12.2012 இல் உள்ளபடியான சொத்துக்களில் உள்ளடங்கியுள்ள ரூபா 50000 கிரயமான இருப்புக்கள் விற்பனை செய்யப்பட்டிருந்த போதும் வாடிக்கையாளருக்கு இதுவரை விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை.

31.12.2012இல் முடிவடைந்த வருடத்திற்கான தேறிய இலாபம் / நட்டம்?

03. கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி 2012.04.01 இல் சமன் வியாபாரத்தின் தேறிய சொத்துக்களின் பெறுமதியைக் கணிக்க

| | ரூபா |
|---|---|
| 2013.03.31இல் உள்ள தேறிய சொத்துக்கள் | 840000 |
| வருட இலாபம் | 210000 |
| இவ்வருட காலத்தில் உரிமையாளரினால் பற்றுதல் செய்யப்பட்ட காசு | 120000 |
| கணக்கிலிடப்படாத வருடகாலத்தில் உரிமையாளரினால் பற்றுதல் செய்யப்பட்ட பொருட்களின் கிரயம் | 10000 |

04. நிசா நிறுவனத்தின் 2012ம் ஆண்டுடன் தொடர்புபட்டவை.

| | 31.12.2012 | 01.01.2012 |
|---|---|---|
| மொத்த சொத்துக்கள் | 850000 | 920000 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 250000 | 260000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மேலதிக தகவல்கள்:*

31.12.2012இல் காணப்பட்ட மொத்தச் சொத்துக்களில் உள்ள கடன்பட்டோரின் தொகை ரூபா 40000 அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிக்கப்படல் வேண்டும். இவ்வாண்டு காலப்பகுதியில் உரிமையாளர் பற்றுதல் செய்யப்பட்ட காசு ரூபா 20000, பொருட்கள் ரூபா 30000.

வேண்டப்படுவது :-1. 01.01.2012இல் தேறிய சொத்துக்கள்

2. 31.12.2012இல் தேறிய சொத்துக்கள்

3. 2012ம் ஆண்டில் தேறிய சொத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு / குறைவு

4. 2012 ஆண்டிற்கான தேறிய இலாபம் / நட்டம்

05. ரவி நிறுவனத்தின் 2012ம் ஆண்டு April மாதத்துடன் தொடர்புபட்டவை

| | ரூபா |
|---|---|
| 31.03.2012இல் தேறிய சொத்துக்கள் | 650000 |
| மாதத்திற்கான தேறிய நட்டம் | 50000 |
| உரிமையாளர் பற்றிய காசு(April) | 40000 |
| உரிமையாளர் பற்றிய பொருட்கள்(April) | 20000 |
| April மாதம் ஈடுபடுத்திய மேலதிக மூலதனம் | 5000 |
| 30.04.2012இல் தேறிய சொத்துக்கள் | ??? |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. சேனாவும், பாலாவும் இருவேறு வியாபாரங்களில் ஈடுபட்டுள்ளனர். அவர்களது வியாபார மூலதனங்கள் 2014-03-31 இந் திகதியில் முறையே ரூ 150000உம் ரூ 43000 உம் ஆகும். 2015-03-31 இல் முடிந்த ஆண்டுக்கான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

சேனாவின் வியாபாரத்தில் நட்டமும், அவரது எடுப்பனவுகளும் முறையே ரூ 15000 உம், ரூ 19000 உம் ஆகும். பாலாவின் எடுப்பனவு ரூ 7000, அவரது வியாபார மூலதனம் 2015.03.31 ஆந்திகதியில் இருந்தபடி ரூ 48000

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

1. 2015.03.31 தினத்தன்று சேனாவின் வியாபார மூலதனம்
2. 2015.03.31 இல் தினத்தில் முடிவடையும் ஆண்டுக்கான பாலாவின் இலாபம் அல்லது நட்டம்.

07. A, B, C எனும் மூன்று வியாபாரங்களுக்குமான அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| வியாபாரம் | A | B | C |
|---|---|---|---|
| மூலதனம் 01.01.2015 | 20000 | ? | 120000 |
| மூலதனம் 31.12.2015 | ? | 90000 | 180000 |
| மேலதிக மூலதனம் | 10000 | 30000 | ? |
| எடுப்பனவுகள் | 5000 | 5000 | 10000 |
| 2015 ஆண்டிற்கான இலாபம் / நட்டம் | 10000 | (20000) | 40000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. பின்வரும் விபரங்களின் அடிப்படையில் "பக்தியா" வியாபாரிகளின் 2015 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டுகளுக்கான இலாபம் அல்லது நட்டத்தைக் கணிப்பிடுக.

| | 01.04.2014 | 31.03.2015 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| வங்கி மீதி | (2000) | 11000 |
| வருமதி உண்டியல்கள் | 50000 | 15000 |
| கடன் பட்டோர் | 30000 | 34000 |
| கைவசமுள்ள காசு | 500 | 5000 |
| கையிருப்புக்கள் | 45000 | 60000 |
| மோட்டார் வாகனம் | 60000 | 140000 |
| கடன் கொடுனர் | 30000 | 35000 |
| தளபாடம் | 25000 | 25000 |

சொத்துக்களுக்கு ஆண்டிறுதி மீதியின் மீது 20% படி தேய்மான ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். ஐயக்கடன்களுக்குக் கடன் பட்டோரின் 5% படி ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். மேலும் இவ்வாண்டிற்கான எடுப்பனவுகள் ரூபா. 20000 மேலதிக மூலதனம் ரூபா 30000 ஆகவுள்ளது.

09. திரு.கீர்த்திசேன தனது வியாபாரம் தொடர்பாகக் கணக்கு ஏடுகள் வைத்திருக்கவில்லை 2015ஆம் ஆண்டு மார்ச் 31ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான கீர்த்திசேன அவர்களது வியாபாரத்தின் தேறிய இலாபத்தை நீர் கணித்தல் வேண்டும். திரு.கீர்த்திசேன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்துக்களையும் பரிப்புக்களையும் கொண்ட பட்டியல் ஒன்றை தயாரித்தார். அது கீழே தரப்பட்டுள்ளது.

| | 31.03.2014 ரூபா | 31.03.2015 ரூபா |
|---|---|---|
| கைவசமுள்ள காசு | 5400 | 28000 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 240000 | 295200 |
| வியாபாரக் கடன் கொடுத்தோர் | 200000 | 290000 |
| சென்மதி உண்டியல்கள் | 320000 | 120000 |
| மோட்டார் வாகனங்கள் | 850000 | 815000 |
| வியாபாரத் தொக்கு | 325000 | 420000 |
| வங்கியிலுள்ள காசு | - | 68000 |
| தளபாடங்கள் | 75000 | 67000 |
| வருமதியான உண்டியல்கள் | 120000 | 110000 |
| வங்கி மேலதிக வரைபு | 10000 | - |

நிலையான சொத்துக்கள் இவ்வாண்டிலே கொள்வனவு செய்யப்படவுமில்லை, விற்பனை செய்யவுமில்லை. இவ்வாண்டிற்கான எடுப்பனவுகள் ரூபா 30000, மேலதிக முலதனம் ரூபா 20000 வியாபாரக் கடன்பட்டோரிடம் இருந்து 10000 ரூபாவை பெற முடியவில்லை. மிகுதி மீதியில் ஐயக்கடன்களுக்கான 5 சதவீத ஏற்பாடு ஒன்று செய்யப்பட உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09) இரட்டைப் பதிவு அடிப்படையில் மாற்றியமைத்து நிதிக்கூற்றுக் களைத் தயாரித்தல் என்றால் என்ன?

நிறுவனத்தில் காணப்படும் நிதித்தகவல்கள் இரட்டைப் பதிவு அடிப்படையில் காணப்படாத நிலையில் வருமானக் கூற்று, ஐந்தொகை என்பவற்றைத் தயாரிப்பதற்கு தேவையான தகவல்களை காண்டுபிடிப்புக்கள் மூலம் திரட்டி முடிவுக்கணக்குகளினை தயாரிக்கும் முறையே இரட்டைப் பதிவு அடிப்படையில் மாற்றியமைத்து நிதிக்கூற்றுக்களினை தயாரித்தல் ஆகும்.

e.g :

1. கடன்பட்டோர் கணக்கினைத் தயாரித்து விற்பனையினைக் கண்டுகொள்ளல்.
2. கடன்கொடுத்தோர் கணக்கினைத் தயாரித்து கொள்வனவினைக் கண்டுகொள்ளல்

## Problems

01. பிள்ளையார் என்பவர் ஒழுங்கான முறையில் கணக்குப் புத்தகங்களைப் பேணி வரவில்லை. 2012ம் ஆண்டு ஆரம்பத்திலும், இறுதியிலும் அவரிடம் இருந்த சொத்துக்கள், பொறுப்புக்கள் வருமாறு

| | ரூபா<br>01.01.2012 | ரூபா<br>31.12.2012 |
|---|---|---|
| காணி, கட்டிடம் | 100000 | 110000 |
| தளபாடம் | 30000 | 25000 |
| சரக்கிருப்பு | 36000 | 42000 |
| கடன்பட்டோர் | 60000 | 45000 |
| கடன்கொடுத்தோர் | 45000 | 36000 |
| காசு மீதி | 75000 | ? |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*மேலதிக தகவல்கள்*

01. அவரிடம் இருந்த சிறிய காசுப் புத்தகத்தில் இருந்து பின்வரும் விபரங்கள் பெறப்பட்டன.

| | | ரூபா |
|---|---|---|
| i. | பொதுச் செலவுகள் | 18000 |
| | விளம்பரம் | 16000 |
| | காப்புறுதி | 8500 |
| | கடன்பட்டோரிடமிருந்து பெற்றது | 316000 |
| | கடன்கொடுத்தோருக்கு கொடுத்தது | 202000 |
| | கட்டிடம் கட்டியது | 15000 |
| ii. | உட்திரும்பல் | 4000 |
| | பெற்ற கழிவு | 2000 |

வேண்டப்படுவது :-

1. 31.12.2012இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று
2. 31.12.2012இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று.

02. கணபதி என்பவர் ஒழுங்கான முறையில் கணக்குப் பதிவுகளினை பேணிவராத வியாபாரி ஆவார். 2013 ஆண்டு காலத்தில் ஆரம்பத்திலும், இறுதியிலும் அவரது வியபாரத்தில் இருந்து சொத்துக்கள், பொறுப்புக்கள் வருமாறு,

| | ரூபா 01.01.2013 | ரூபா 31.12.2013 |
|---|---|---|
| காணி கட்டிடம் | 80000 | 90000 |
| தளபாடம் | 40000 | 38000 |
| சரக்கிருப்பு | 12000 | 20000 |
| காசு மீதி | 14000 | ? |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கடன்கொடுத்தோர் | 9000 | 4000 |
| கடன்பட்டோர் | 12000 | 25000 |

அ) கணபதியிடமிருந்து சிறிய காசுக்குறிப்புப் புத்தகத்தில் இருந்து பின்வரும் விபரங்கள் பெறப்பட்டன.

| | ரூபா |
|---|---|
| கொள்வனவுச் செலவு | 4000 |
| பிரயாணச் செலவு | 2000 |
| விளம்பரம் | 1500 |
| பொதுச் செலவு | 7000 |
| கடன்பட்டோரிடமிருந்து பெற்றது | 300000 |
| காப்புறுதி | 7000 |
| கட்டிடம் கட்டியது | 15000 |
| கடன்கொடுத்தோருக்கு கொடுத்தது | 160000 |

ஆ) *மேலதிக தகவல்கள் :*

| | ரூபா |
|---|---|
| உட்திரும்பல் | 3000 |
| பெற்றகழிவு | 2000 |
| உரிமையாளர் பற்றிய சரக்கு | 1000 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டப்படுவது :-

1. 31.12.2013 முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று
2. 31.12.2013 இல் உள்ளவாறான நிதிநிலைக்கூற்று

03. திரு.பெர்னான்டோ பலசரக்கு கடையொன்றை நடத்துகிறார். ஆனால் ஒரு முறையான கணக்குப்புத்தகத் தொகுதியைப் பேணவில்லை. எனினும் நடைமுறையிலுள்ள அவரது புத்தகங்களைப் பகுப்பாய்வு செய்யும் போது அவரது சொத்துக்களும் பொறுப்புக்களும் 2012ம் ஆண்டு ஆரம்பத்திலும், முடிவிலும் பின்வருமாறு இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

| | 1.1.2012 | 31.12.2012 |
|---|---|---|
| காணி கட்டிடங்கள் (கிரயத்தில்) | 270000 | 270000 |
| தளபாடம் (கிரயத்தில்) | 93000 | 93000 |
| இருப்பு | 127500 | 117900 |
| வருமதியாளர் | 36450 | 64350 |
| சென்மதியாளர் | 74850 | 68550 |
| காசு மீதி | 69900 | 78300 |

வியாபாரத்தில் பேணப்பட்ட தற்காலிகக் குறிப்புப் புத்தகத்தில் உள்ளவற்றுக்கிணங்க ஆண்டுக்குரிய காசுக் கொடுப்பனவுகள் பின்வருமாறு:

| | ரூபா |
|---|---|
| சம்பளமும் கூலியும் | 90300 |
| வருமதியாளரிடமிருந்து பெற்ற காசு | 1219500 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| வழங்குனருக்கு செலுத்திய காசு | 965100 |
| சில்லறைச் செலவுகள் | 31500 |
| தொலைபேசிக் கட்டணம் | 21600 |
| மின்சாரம் | 10350 |
| அச்சிடலும் எழுது பொருளும் | 17100 |
| வாடகை | 36000 |

ஆண்டில் ஏதேனும் காசுக்குறைபாடு காணப்படின் அவை திரு.பெர்னான்டோவின் எடுப்பனவுகள் எனக் கருதப்படல் வேண்டும். திரு.பெர்னான்டோ தனது சொந்தத் தேவைக்காக ரூபா 10800 கிரயமான பொருட்களை வியாபாரத்தில் இருந்து எடுத்துள்ளார்.

வேண்டப்படுவது:-

1. 31.12.2012இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று
2. 31.12.2012 இல் உள்ளவாறான நிதிநிலைக்கூற்று

04. 31.12.2012இல் ஏற்பட்ட தீ விபத்தொன்றின் காரணமாக நிரஞ்சனின் வியாபாரத்தின் கணக்குப் புத்தகங்கள் அழிவடைந்தன. எவ்வாறாயினும் நிரஞ்சன் இறைவரித் திணைக்களத்தில் இருந்து வரிக் கோவையிலிருந்து 31.12.2011இல் உள்ளபடியான பிரித்தெடுக்கப்பட்ட ஐந்தொகையை எடுக்கக்கூடியதாக இருந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | |
| காணி கட்டிடம் (தேறியது) | 180000 | |
| தளபாடம் பொருத்துக்கள் (தேறியது) | 80000 | 260000 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| இருப்புக்கள் | 18800 | |
| கடன்பட்டோர் | 16200 | |
| வங்கி | 9600 | 44600 |
| | | 304600 |
| **உரிமையும் பொறுப்புக்களும்** | | |
| முலதனம் | 200000 | |
| நிறுத்திவைத்த வருமானம் | 62100 | 262100 |
| **நடைமுறை அல்லா பொறுப்பு** | | |
| வங்கிக்கடன் 10% | | 30000 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| கடன் கொடுத்தோர் | 11000 | |
| அட்டுறு கடன் வட்டி | 1500 | 12500 |
| | | 304600 |

*மேலதிக தகவல்கள்:*

1. கட்டிடங்கள் வருடாந்தம் 10%, தளபாட உபகரணங்கள் வருடாந்தம் 25% குன்று நிலுவை மீதியில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றது. காணி கட்டிடங்களின் பெறுமதியினுள் காணியின் பெறுமதி ரூபா 100000 உள்ளடங்கியுள்ளது.

2. வங்கிக்கூற்றின் வெளிப்படுத்தலின்படி இக்கணக்காண்டு காலத்தில் கடன்பட்டோரிடமிருந்து ரூபா 178000 தொகையான காசோலைகள் பெறப்பட்டன. வியாபாரத்தின் எல்லாக் கொடுப்பனவுகளும் வங்கிக் கணக்கின் ஊடாகச் செய்யப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் கொடுப்பனவுகள் இக்கணக்காண்டுக் காலத்தினுள் மேற்கொள்ளப்பட்டவைகளாகும்.

| | ரூபா |
|---|---|
| சம்பளமும் கூலியும் | 36000 |
| மோட்டார் வாகனம் | 4000 |
| கடன்வட்டி | 3000 |
| பொது செலவுகள் | 3000 |
| கடன் கொடுத்தோருக்கு கொடுத்தது | 45250 |

3. 31.12.2012 இல் உள்ளபடியான ஏனைய மீதிகள்

| | ரூபா |
|---|---|
| கடன் கொடுத்தோர் | 9500 |
| கடன்பட்டோர் | 17500 |
| இருப்புக்கள் | 16000 |

வேண்டப்படுவது :-

1. 31.12.2012 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று
2. 31.12.2012 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று

05. பின்வரும் தகவல்கள் யதுர்ஷன் வியாபாரத்தின் கணக்குப் புத்த கங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டதாகும்.

1. சில சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீதிகள் :-

| | ரூபா 31.03.2013 | ரூபா 31.03.2012 |
|---|---|---|
| முற்செலுத்திய செலவுகள் | 14000 | 10000 |
| சென்மதிச் செலவுகள் | 30000 | 60000 |
| இருப்புக்கள் | 110000 | 240000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தளபாடம் (குறைத்தெழுதிய பெறுமதியில்) | 164000 | 140000 |
| கடன் கொடுத்தோர் | 520000 | 440000 |

2. 31.03.2013 இல் முடிவடைந்த கணக்காண்டு வருடத்திற்கான காசுப் பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும்.

| | ரூபா |
|---|---|
| கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்டது (2.5% கழிவினைக்கழித்த பின்) | 975000 |
| 2012.10.01 இல் தளபாடக் கொள்வனவிற்கான கொடுப்பனவுகள் | 40000 |
| செலவுகள் | 150000 |
| கடன்கொடுத்தோரிற்கான கொடுப்பனவு (2% கழிவினைக் கழித்த பின்) | 588000 |

3. மொத்த இலாபப் பங்கு விற்பனையில் 20%
4. எல்லா விற்பனைக்களும், கொள்வனவுகளும் கடனுக்கே மேற் கொள்ளப்பட்டன.
5. உரிமையாளரால் ரூபா 10000 பெறுமதியான பொருட்கள் இவரின் சொந்தப்பாவனைக்காக இருப்பிலிருந்து எடுக்கப்பட்டன.

வேண்டப்படுவது:-

யதுர்ஷன் வியாபாரத்தின் 2013 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான கூற்றினைத் தயாரிக்குக.

06. லக்சிகா ஒரு மின் உபகரண கடையொன்றின் உரிமையாளராவார். இவர் இரட்டைப்பதிவு முறையின்படி கணக்குகளை ஒழுங்காக பேணிவருவதில்லை. 2012.12.31இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வரும் தகவல்கள் புத்தகங்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இவ்வியாபாரத்தின் இவ்வாண்டுக்கான சுருக்கப்பட்ட வங்கிக் கணக்கு கீழே தரப்பட்டுள்ளது.

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| 01.01.2012 இல் உள்ளபடியான மீதி | | 17000 |
| வைப்பு | | 585400 |
| | | 602400 |
| (-) வாடகை | 58000 | |
| இறைகள் | 20400 | |
| மின்சாரம் | 9800 | |
| சில்லறைச் செலவுகள் | 5600 | |
| கடன்கொடுத்தோருக்குச் செலுத்திய காசு | 388000 | (481800) |
| 31.12.2012 இல் மீதி | | 120600 |

2. எல்லாவிற்பனைகளும், கொள்வனவுகளும் கடன் அடிப்படையில் இடம்பெற்றதாகும்.

3. கடன்பட்டோரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லா காசும் பின்வரும் கொடுப்பனவுகளை மேற்கொண்ட பின்பு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது.

அ) வாராந்த பற்றுக்கள் ரூபா 1000 (ஒரு வருடத்தில் 52 வாரங்கள் எனக் கொள்க)

ஆ) உதவியாளர் கூலிகள் ரூபா 88400

இ) சில்லறைச் செலவுகள் ரூபா 21000

4. பின்வரும் மேலதிக தகவல்களும் கிடைப்பனவாக உள்ளன.

| | 2012.01.01<br>ரூபா | 2012.12.[illegible]<br>ரூபா |
|---|---|---|
| இருப்பு | 36000 | 52000 |
| கடன்பட்டோர் | 10600 | 17600 |
| கடன்கொடுத்தோர் | 27600 | 38680 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டப்படுவது:-

2012.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று

07. மோகன் என்பவர் ஒரு தனி வியாபாரி ஆவார். இவர் சரியான முறையில் கணக்குப் புத்தகங்களைப் பேணி வரவில்லை. 2013.12.31இல்இவர் பின்வரும் தகவல்களை முன்வைத்தார்.

i. 2013.01.01 இல் சொத்துக்களும் பொறுப்புக்களும்

| | |
|---|---|
| மொத்தச் சொத்துக்கள் (வங்கி மீதி நீங்கலாக) | ரூபா 728000 |
| பொறுப்புக்கள் (வியாபாரக் கடன்கொடுத்தோர்) | ரூபா 60000 |

ii. 2013.12.31இன் வருட முடிவுக்கான வங்கிக்கூற்றிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட சுருக்கப்பட்ட தகவல்கள்:

| | |
|---|---|
| 2013.01.01 இல் உள்ளபடியான மீதி | ரூபா 22000 |
| மொத்த வைப்புக்கள் | ரூபா 700000 |
| கடன்கொடுத்தோருக்கு வழங்கிய மொத்தக்காசோலைகள் | ரூபா 625000 |
| செலவீனங்களிற்கு வழங்கிய மொத்தக் காசோலைகள் | ரூபா 37000 |
| வங்கிக்கட்டணங்கள் | ரூபா 1850 |

iii. வரி அறிக்கைகளிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட விற்பனைகளினதும், விற்பனை வரியினதும் விபரங்கள்

| | |
|---|---|
| விற்பனைகள் | ரூபா 765000 |
| காசோலை மூலம் செலுத்திய விற்பனை புரள்வுகள் வரி | ரூபா 7650 |

(இக்காசோலை 2013.12.31 இல் திகதி வரைக்கும் வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை)

iv. எல்லா விற்பனைகளும் காசு அடிப்படையில் மேற்கொள்ளப் பட்டவையாகும். பெறப்பட்ட இவ் மொத்தக் காசிலிருந்து கீழே தரப்பட்டுள்ள செலவீனங்களையும், மோகனின் சொந்தச் செலவீனங்களையும் செலுத்திய பின்பு இருந்த மிகுதிக் காசு முழுவதும் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டன.

| | |
|---|---|
| பிரயாணங்கள் | ரூபா 24000 |
| சம்பளம்,கூலிகள் | ரூபா 18000 |
| கட்டிட வாடகை | ரூபா 6000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v. 2013.12.31இல் உள்ளபடியான சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வருமாறு:

| | |
|---|---|
| மொத்தச் சொத்துக்கள் (வங்கிமீதி நீங்கலாக) | ரூபா 728000 |
| பொறுப்புக்கள் (வியாபாரக்கடன் கொடுத்தோர்) | ரூபா 45000 |

வேண்டப்படுவது:-

1. 2013.01.01 இல் உள்ளபடியான மூலதன மீதியினைக் கணிப்பிடுக.
2. இக்கணக்காண்டு காலத்திற்கான கொள்வனவுத் தொகையைக் காண்க.
3. 2013ம் ஆண்டிற்கான காசுப் புத்தகத்தை (இரு நிரல்கள்) தயாரிக்குக.
4. 2013.12.31 இல் உள்ளபடியான மூலதன மீதியினைக் கணிப்பிடுக.
5. 2013 ம் ஆண்டிற்கான தேறிய இலாபத்தினைக் கணிப்பிடுக. (தேறிய சொத்து அடிப்படையில்)

08. குறித்த வியாபாரத்தின் 2013 ஆரம்பத்திலும், முடிவிலும் காணப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| | 2013.01.01 | 2013.12.31 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| காசு | 1000 | 2500 |
| வருமதியாளர் | 6250 | 4750 |
| இருப்பு | 8700 | 10250 |
| உபகரணம்(தேறியது) | 4000 | 3500 |
| சென்மதியாளர் | 6500 | 7050 |

2013ம் ஆண்டுகாலத்தில் எல்லாச் செலவுகளும் (பெறுமானத் தேய்வு தவிர) காசு மூலம் செலுத்தப்பட்டது. இவ்வாண்டில் வருமதியாளரிடமிருந்து பெற்ற தொகை ரூபா 40000 ஆகவும், சென்மதியாளருக்கு கொடுத்தது ரூபா 27500 ஆகவும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2013 ஆண்டுகாலத்தில் வேறு ஏதேனும் பெறுவனவுகளோ, கொடுப்பனவுகளோ இடம்பெறவில்லை.

2013ம் ஆண்டிற்கான பின்வருவனவற்றைக் கணிக்குக.

i. விற்பனை (கடன்)

ii. கொள்வனவுகள் (கடன்)

iii. விற்பனைக் கிரயம்

iv. ஏனைய செலவுகள்

v. தேறிய இலாபம்

(வருமானக் கூற்றின் மூலம் காண்க)

09. சாந்தன் என்ற சில்லறை வியாபாரி முறையாகக் கணக்குகளைப் பேணுவதில்லை. அவரின் கொள்வனவுகள் எல்லாம் கடனடிப் படையிலும் ஆனால் விற்பனைகள் காசிற்கும், கடனிற்கும் மேற்கொள்ளப்பட்டன.

தனது சொந்த செலவுக்காக ஒவ்வொரு வெள்ளியன்றும் வாரந்தோறும் அவர் எடுக்கும் ரூபா 300ஐ விட அவர்தான் பெறும் பணம் எல்லாவற்றையும் கிரமமாக வங்கியிலிடுவார். வருடகால்த்தில் பெறப்பட்ட மொத்தப் பணத்தில் 60% ஆனவை காசு விற்பனை சம்பந்தமானவை, மிகுதி கடன்பட்டோரிடமிருந்து பெற்றவையைக் காட்டுகின்றது.

அவரின் காசுக்குறிப்புப் புத்தகத்தின் வங்கி நிரலின் 31 டிசெம்பர் 2013 இல் உள்ளவாறான சுருக்கம் பின்வருமாறு.

| | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| காசு வைப்புக்கள் | 62100 | - |
| கடன்கொடுத்தோருக்கு கொடுத்தது | - | 32500 |
| வாடகை | - | 2400 |
| இறைகள் | - | 1200 |
| உபகரணங்கள் | - | 2000 |
| சம்பளமும், கூலியும் | - | 6200 |
| முதலீடுகள் | - | 20000 |
| காப்புறுதி | - | 3000 |
| வங்கி வசூலித்த முதலீட்டு வருமானம் | 10000 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாக் கொடுப்பனவுகளும் காசோலைகள் மூலம் செய்யப்பட்டன. இவ்வருட காலத்தில் அனுமதித்த கழிவுகளும், பெற்ற கழிவுகளும் முறையே. ரூபா 1200 உம், 2100 உம் ஆகும். ரூபா 800 அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிக்கப்படல் வேண்டும். அவரின் புத்தகங்களைப் பரிசோதனை செய்தபோது பின்வரும் மீதிகள் காணப்பட்டன.

| | 01.01.2013 | 31.12.2013 |
|---|---|---|
| கடன்பட்டோர் | 20250 | 24150 |
| கடன்கொடுத்தோர் | 17540 | 15400 |
| உபகரணங்கள் | 21400 | 23000 |
| சரக்கிருப்பு | 18900 | 19250 |
| முற்பண வாடகை | 650 | - |
| அட்டுறு காப்புறுதி | 1540 | 150 |
| வங்கி | 14280 | 19080 |
| காசு | இல்லை | 260 |

வேண்டப்படுவது :-

1. 2013ம் ஆண்டுக்கான காசுப்புத்தகம் (காசு, வங்கி நிரல்கள் மட்டும்)
2. 31 டிசெம்பர் 2013 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று.
3. 31 டிசெம்பர் 2013 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று

10. சில்லறை வியாபாரியின் மரடோனா தகுந்த கணக்குகளை பேணி வரவில்லை.

i. 2013 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு கிடைக்கப்பெற்ற அவரது வங்கிக் கூற்றின் சுருக்கம் பின்வருமாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| 2012.04.01 இல் மீதி | | 20000 |
| வைப்புக்கள் | | |
| | | 205000 |
| | | 225000 |
| கொடுப்பனவுகள் | | |
| கடன்கொடுத்தோர் | 160100 | |
| மோட்டார் | 15000 | |
| சம்பளங்கள் | 20000 | |
| காப்புறுதி | 5000 | |
| மின்சாரம் | 4000 | (204100) |
| 2013.03.31 இல் மீதி | | 20900 |

* அவர் தனது சொந்த உபயோகத்திற்கு ரூபா 15000 வை வைத்திருந்த பின்னர் காசு சேகரிப்பின் மீதியினை வங்கியில் வைப்புச் செய்கின்றார்.
* நடப்பாண்டில் ரூபா 5000 அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிக்கப்படும்.
* ரூபா 8000 பெறுமதியான பொருட்கள் வெளியில் திருப்பி அனுப்பப்பட்டது.

ii. சொத்துக்கள், பொறுப்புக்கள் வருமாறு

| | ரூபா 2012.04.01 | ரூபா 2013.03.31 |
|---|---|---|
| கடன்பட்டோர் | 25000 | 30000 |
| கடன்கொடுத்தோர் | 14000 | 20000 |
| மோட்டார் | 17000 | 30000 |
| இருப்புக்கள் | 19000 | ? |
| அட்டுறுக் காப்புறுதி | 1000 | 1500 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் என்பவர்களுடன்

| தொடர்புடைய காசோலைகள் | மாற்றப்படாத காசோலைகள் | வசூலிக்கப்படாத காசோலைகள் |
|---|---|---|
| | (ரூபா) | (ரூபா) |
| ஆண்டுத் தொடக்கத்தில் | 12000 | 17000 |
| ஆண்டு இறுதியில் | 10000 | 20000 |

இந்நிறுவனம் விற்பனை விலையில் 30% இலாபத்தில் தொழிற்படுகிறது. எனக்கொண்டு பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

1. 2013.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று
2. 2013.03.31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று.

11. காந்தன் நிறுவனத்தின் 2013.03.31 இல் உள்ளவாறான ஐந்தொகை கீழே தரப்பட்டுள்ளது.

| | குறிப்பு | "ரூபா 000" |
|---|---|---|
| இயந்திரங்கள் | 1 | 300 |
| சரக்கிருப்புக்கள் | | 100 |
| கடன்பட்டோர்கள் | | 50 |
| அலுவலக எழுதுகருவிகள் | | 30 |
| காசு | 2 | 20 |
| மொத்தச்சொத்துக்கள் | | 500 |
| உரிமையாண்மை | | 440 |
| கடன்கொடுத்தோர் | | 60 |
| மொத்த உரிமையாண்மையும் பொறுப்புக்களும் | | 500 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு 1 ⟹ 2013.03.31 இல் பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 200 000 ஆகும்

குறிப்பு 2 ⟹ காசு மீதியானது சில்லறைக் காசு மீதி ரூபா 2000.

ஐயும் உள்ளடக்கியுள்ளது.

கீழே தரப்பட்டுள்ள கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் 2013 ஏப்ரல் மாதத்துடன் தொடர்பானதாகும்.

i. காசுப் பெறுவனவுகளினதும் கொடுப்பனவுகளினதும் சுருக்கம் :

| | |
|---|---|
| * கடன்பட்டோரிடமிருந்து சேகரிக்கப்பட்டவைகள் | ரூபா 590000 |
| * மீளப்பெறப்பட்ட அறவிடமுடியாக் கடன்கள் | ரூபா 20000 |
| * விநியோகத்தருக்கு கொடுக்கப்பட்ட முற்பணம் | ரூபா 30000 |
| * விநியோகத்தர்களுக்கு கொடுப்பனவுகள் | ரூபா 370000 |
| * அலுவலக எழுதுகருவிகள் கொள்வனவு | ரூபா 5000 |
| * சில்லறைக் காசின் மீள் நிரப்புத்தொகை | ரூபா 12000 |
| * செலவுகள் | ரூபா 135000 |

ii. 2013.04.30 இல் இயந்திரமொன்று ரூபா 100000 இற்குக் கடனுக்குப்பெறப்பட்டது.

iii. மொத்த விற்பனைகள் ரூபா 600000

iv. மொத்த கொள்வனவுகள் ரூபா 400000

v. செலுத்திய சில்லறைக் காசுச் செலவுகள் ரூபா 8000

vi. இயந்திரத்தின் பெறுமானத் தேய்வு ரூபா 5000

vii. பாவிக்கப்பட்ட அலுவலக எழுதுகருவிகள் ரூபா 10000

viii. மொத்தச் செலவுகள் (விற்பனைக்கிரயம், சில்லறைக் காசுச் செலவுகள், பெறுமானத் தேய்வு, அலுவலக எழுதுகருவிகளின் செலவுகள் நீங்கலாக ) ரூபா 150000

ix. விற்பனையில் 40% மொத்த இலாபமாக பராமரிக்கப்படுகின்றது.

x. வங்கியானது இருப்புகளை ஈடாக வைத்து ரூபா 200000 வங்கி மேலதிக பற்று வசதியினை அனுமதித்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டப்படுவது:-

1. 2013 ஏப்ரல் மாதத்திற்கான ஆரம்ப மீதிகளை பதிவிடுவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள்
2. 2013 ஏப்ரல் மாத்திற்கான காசுக் கணக்கு
3. 2013.04.30 உள்ளவாறான நிதிநிலைக்கூற்று

12. வணிகனொருவன் பின்வரும் தகவல்களைச் சமர்ப்பித்துள்ளார்

i. காசு தவிர்ந்த மொத்தச் சொத்துக்களும், மொத்தப் பொறுப்புக்களும்.

| | 2013.04.30 (ரூபா) | 2013.03.31 (ரூபா) | 2012.03.31 (ரூபா) |
|---|---|---|---|
| 2011.04.01 இல் வாங்கப்பட்ட உபகரணம் (கிரயத்தில்) | 100000 | ? | 100000 |
| சரக்கிருப்புக்கள் | 110000 | ? | 65000 |
| கடன்பட்டோர் | 35000 | ? | 50000 |
| கடன்கொடுத்தோர் | 35000 | ? | 25000 |
| நிலுவைச் செலவுகள் | --- | 5000 | 15000 |

ii. உபகரணங்கள் வருடாந்தம் கிரயத்தில் 20% பெறுமானத் தேய்விடப்படுகின்றது.

iii. 2013.03.31 இல் ரூபா 210000 செலவு மீதியொன்று உள்ளது என வங்கி உறுதிப்படுத்தியது. இத்திகதியில் வசூலிக்கப்படாதிருந்த ரூபா 10000 தொகை கொண்ட காசோலை மட்டுமே 2013 ஏப்ரல் வசூலிக்கப்பட்டது. அத்துடன் 2013.03.31 இல் எதுவித சமர்ப்பிக்கப்படாத காசோலைகளும் இருக்கவில்லை.

iv. 2013 ஏப்ரல் மாதத்தில் மொத்த விற்பனையும், கடன்பட்டோரிடமிருந்து சேகரிக்கப்பட்ட காசும் முறையே ரூபா 50000, ரூபா 45000 ஆக இருந்தது.

v. 2013.03.31 இல் முடிவடைந்த ஆண்டில் கடன்கொடுத்தோருக்கு கொடுத்த காசு ரூபா 630000 ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vi. 2013 ஏப்ரல் மாத காலத்தினுள் செய்யப்பட்ட காசுக் கொள்வனவுகள் ரூபா 30000 ஆகும்.

vii. 2013 ஏப்ரல் மாத காலத்தினுள் எதுவித கடன்கொள்வனவும் இடம்பெறவில்லை. எனினும் கடன்கொடுத்தோருக்கு கொடுத்த காசு ரூபா 15000 ஆகும்.

viii. வியாபாரத்தை ஆரம்பிக்கையில் அறிமுகப்படுத்திய மூலதனம் ரூபா 300000 ஆகும்.

ix. கிரயத்தில் 25% ஆனது மொத்த இலாப எல்லையாக எப்போதும் பேணப்படல் வேண்டும்.

x. 2013.03.31 இல் முடிவடைந்த வருடத்தினுள் உரிமையாளரால் மேற்கொள்ளப்பட்ட காசுப்பற்றுக்கள் ரூபா 10000 ஆகும்.

xi. 2012.03.31 இலுள்ள உரிமையாண்மை ரூபா 340000 ஆகும்.

வேண்டப்படுவது :-

1. 2013.03.31இல் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த இலாபம்
2. 2013.03.31இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று
3. கடன்பட்டோரிடமிருந்து சேகரிக்கப்பட்ட காசு கடன்கொடுத்தோருக்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகள், செலவுகளுக்கான கொடுப்பனவுகள் மற்றும் பற்றுக்கள் ஆகியவற்றைக் காட்டக்கூடியதான 2013.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்புத்தகச் சுருக்கம் (காசுக்கணக்கு)

13. "ஞானி" தனி வியாபாரத்தின் 31.12.2012 இல் ஐந்தொகை

| | ரூபா |
|---|---|
| தளபாடம் பொருத்து | 180000 |
| இருப்பு | 280000 |
| கடன்பட்டோர் | 280000 |
| காசு | 260000 |
| | 1000000 |
| மூலதனம் | 850000 |
| கடன் கொடுத்தோர் | 150000 |
| | 1000000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வியாபாரம் தொடர்பான மேலதிக தகவல்கள் பின்வருமாறு:-

1. 31.12.2012 முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த விற்பனை ரூபா 1100000 ஆகும். 2013ம் ஆண்டில் விற்பனை 20% ஆல் அதிகரித்திருந்தது.
2. விற்பனையில் மொத்த இலாப வீதம் 25% ஆகக் காணப்பட்டது.
3. 31.12.2012இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேறிய இலாபம் ரூபா 125000 ஆகும்.
4. 31.12.2013 இல் வியாபாரத்தில் இருந்த சொத்துக்களும், பொறுப்புக்களும்.

| | ரூபா |
|---|---|
| இருப்பு | 360000 |
| கடன்பட்டோர் | 240000 |
| கடன்கொடுத்தோர் | 270000 |
| காசு | 141000 |
| அட்டுறுச் செலவுகள் | 12000 |

5. பெறுமானத்தேய்வு தவிர்ந்த ஏனைய செலவுகள் யாவும் 2012ம் ஆண்டினை விட 2013ம் ஆண்டின் 10% ஆல். அதிகரித்துள்ளன.
6. தளபாடத்திற்கு வருடாந்தம் ரூபா 20000 பெறுமானத்தேய்வு இடுவது வழக்கமானது.
7. 2013 ஆண்டுக் காலப்பகுதியில் உரிமையாளர் "ஞானி" ஒரு தொகைப் பணத்தைப் பற்றியிருந்தார்.

வேண்டப்படுவது :-

1. 31.12.2013 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று
2. 31.12.2013 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று.

*Best of Luck!*

*# KBK #*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KBK உங்களுக்காக உங்களுடன்.............

❖ NEC

யாழ்ப்பாணம் பெருமாள் கோவில் அருகில்

❖ NEC

ஆனைப்பந்தி

❖ BPI

பாங்ஷால் வீதி

❖ KBK ACCOUNTING CENTER

கிளை 1 ⇨ கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

கிளை 2 ⇨ கந்தர்மடச்சந்தி, யாழ்ப்பாணம்

அன்றும்......இன்றும்......என்றென்றும்

Tutor:

MR.BALAKAJEN

{B.Com (Jaf), H.N.Dip-in-Acc,
Dip-in-Edu (OUSL), M.Com (Hons)}

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org